In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No.157/2021 | Prosecution witness P.W.2 |
| Name: Hariharan | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 19-11-2024.

**(Accused are present.)**

நான் தற்போது அஞ்சுகுளிப்பட்டியில் வசிக்கிறேன். அசா1 எனது தகப்பனார். எனக்கு திருமணமாகிவிட்டது. என் அப்பா டீக்கடை வைத்து உள்ளார். நான் திண்டுக்கல்லில் உள்ள ஓம் முருகா என்ற மொபைல் கடையில் வேலை பார்த்து வந்தேன். 2018 ம் வருடம் ஜூன் மாதம் எனது அப்பா நடத்தி வரும் டீக்கடைக்கு 1 ம் எதிரி கருஞ்சாமி டீ சாப்பிட அடிக்கடி வருவார். அப்படி எதிரி கருஞ்சாமி வரும்போது தான் நாகரத்தினக்கல் வைத்திருப்பதாகவும் அதை விற்பனை செய்வதற்கு தாங்கள் இருவரும் கூட்டாக இருந்து விற்பனை செய்யலாம் என கூறினார். 2018 ம் வருடம் ஜூலை அல்லது ஆகஸ்ட் மாத வாக்கில் மாணிக்கம்கடை என்ற ஊரில் எனது தந்தையிடம் இருந்து ரூ.50000/- ரொக்கமாக மேற்படி கருஞ்சாமி என்பவர் பெற்றுக்கொண்டார். அப்போது 1 வது கருஞ்சாமி தான் வைத்திருந்த நாகரத்தினக்கல்லை என் தந்தையிடம் கொடுத்துவிட்டு மறுபடியும் அவரிடம் இருந்த அடியாட்களை வைத்து பிடுங்கிக்கொண்டார். அதன் பிறகு 2 மாத காலமாக எனது தந்தை மேற்படி 1 வது எதிரியை எப்படியாவது தொடர்பு கொள்ளலாம் என முயற்சித்தும் முடியவில்லை. பின்னர் ஒரு நாள் 1 வது எதிரியை எனது தகப்பனார் பார்த்துவிட்டார். உடனே 1 வது எதிரி எனது தந்தையிடம் மேலும் ரூ.1 லட்சம் கொடுத்தால் மேற்படி நாகரத்தினக்கல்லை எனது தந்தை வசம் கொடுப்பதாகக் கூறினார். எனது தகப்பனார் அதன்படி ரூ.1 லட்சத்தை அய்யனார்கோவில் அருகில் வைத்து 1 ம் எதிரியிடம் கொடுத்தார். 1 ம் எதிரி சிவப்பு கலர் பாசியைக் கொடுத்து இதுதான் நாகரத்தினக்கல் என சொல்லி ஏமாற்றி என் தந்தையிடம் கொடுத்தார். எனது

தந்தை வீட்டில் வந்து பார்த்தபோது அது சிவப்பு கலர் பாசி என தெரிய வந்தது. உடனே என் அப்பா மேற்படி விவரத்தை 1வது எதிரியிடம் கூற முற்பட்டபோது 1ம் எதிரி கிடைக்கவில்லை. மறுபடியும் 2019 ம் வருடம் ஜனவரி மாதம் ஒரு நாள் எனது தந்தை மேற்படி 1வது எதிரியை தொடர்பு கொண்டு தான் கொடுத்த ரூ.1,50,000/– திருப்பிக்கொடுத்துவிடு என கேட்டார். அதற்கு 1ம் எதிரி மேலும் ரூ.1,50,000/– கொடுத்தால் இந்த முறை உண்மையான நாகரத்தினக்கல்லை கொடுப்பதாக உறுதி அளித்தார். 9.1.2019 ம் தேதி நான், எனது தந்தை, என் நண்பர் சிவக்குமார் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் எங்க வீட்டிலிருந்து 1ம் எதிரியின் ஊருக்குச் சென்றோம். அப்போது சுமார் மாலை 6.30 மணியிருக்கும். அப்போது 1 மற்றும் 2 எதிரிகள் அங்கு இருந்தார்கள். எனது தந்தை மேலும் 1ம் எதிரி கேட்ட ரூ.1,50,000/– த்தை அவரிடம் கொடுத்தார். அதற்கு 1ம் எதிரி இந்த இடம் பாதுகாப்பாக இல்லை என்றும் மறுநாள் மாலை சுமார் 7 மணிக்கு வந்து நாகரத்தினக்கல்லை பெற்றுக்கொள்ளும்படி கூறினார். அதன் பேரில் நானும் என் தந்தை, என் நண்பர் சிவக்குமாரும் 10.01.2019 ம் தேதி மாலை 7 மணிக்கு 1ம் எதிரியின் ஊருக்குச் சென்றோம். அப்போது 1ம் எதிரி கரந்தனின் (3ம் எதிரி) தோட்டத்தில் வைத்து மேற்படி நாகரத்தினக்கல்லை சோதனை செய்து எங்கள் வசம் கொடுப்பதாக கூறி எங்களை அங்கு கூட்டிச் சென்றார். கரந்தனின் தோட்டத்தில் கூரை ஷெட் இருந்தது. அங்கு நாகரத்தினக்கல்லை சோதனை செய்து காட்டுவதாக கூறி மேற்படி கல்லை கீழே வைத்தார்கள். எனது நண்பர் சிவக்குமார் மேற்படி கல்லை தன் கையில் கொடுக்கும்படி கேட்டதற்கு 1வது எதிரி மேற்படி கல்லை சிவக்குமாரிடம் கொடுத்தார். சிவக்குமார் மேற்படி ரூ.3 லட்சத்தை திருப்பிக் கொடுத்துவிட்டு மேற்படி நாகரத்தினக்கல்லை பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறினார். அதற்கு 1வது எதிரி எங்க வந்து யாரிடம் வேலையை காட்டுகிறீர்கள் என்று சொல்லி மிரட்டினார். கல்லை திருப்பிக்கொடு என்று கேட்டு கைகலப்பு ஏற்பட்டது. சிவக்குமார், கருஞ்சாமி, கரந்தன், சின்னையா மற்றும் அங்கிருந்த ஆஜர் எதிரிகளுடன் கைகலப்பு ஏற்பட்டது. அப்போது கரந்தன் 1வது எதிரியிடம்

சிவக்குமாரை குத்துடா என்று சொன்னார். அதற்கு 1ம் எதிரி தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து சிவக்குமாரை குத்த வந்தார். அப்போது என்னையும் என் தந்தையையும் 5 மற்றும் 6 எதிரிகள் பிடித்துக் கொண்டனர். சிவக்குமார் 1ம் எதிரியை கீழே தள்ளினார். அப்போது 1ம் எதிரி வைத்திருந்த கத்தி கீழே விழுந்துவிட்டது. அந்த கத்தியை எடுத்து சிவக்குமார் 1ம் எதிரியை வலது கால் தொடையில் குத்தினார். மற்ற எதிரிகள் எங்களை விட்டுவிட்டு சிவக்குமாரை அடிக்க ஆரம்பித்தனர். அதனால் சிவக்குமாரின் கையில் இருந்த கத்தி கீழே விழுந்துவிட்டது. அதனை 1ம் எதிரி எடுத்து சிவக்குமாரின் வலது பக்க முதுகில் கத்தியால் ஓங்கி குத்திவிட்டார். சிவக்குமார் கையில் வைத்திருந்த நாகரத்தினக்கல்லை மேற்படி எதிரிகள் பிடுங்கிக்கொண்டு ஓடிவிட்டனர். என்னிடம் காட்டப்படும் சாபொ.1 கத்தியால்தான் மேற்படி 1ம் எதிரி சிவக்குமாரை குத்திய கத்தியாகும். என்னிடம் காட்டப்படும் சாபொ.2 பேண்ட்டும், சாபொ.3 சட்டையும் சம்பவ சமயத்தில் சிவக்குமார் அணிந்திருந்ததுதான். அப்போது சிவக்குமார் மயங்கிய நிலையில் இருந்தார். உடனடியாக எனது தந்தை இருசக்கர வாகனத்தை ஓட்டினார். சிவக்குமாரை நடுவில் உட்கார வைத்து நான் பின்னால் உட்கார்ந்து கொண்டு அதிகாரிபட்டியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றோம். அந்த மருத்துவமனை ஓமியோபதி மருத்துவமனை என்பதால் பார்க்க முடியாது என்றும் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லக் கூறினார். அங்கிருந்து இருசக்கர வாகனத்தில் கூட்டிச்செல்ல முடியாததால் ஒரு அங்கு நின்றிருந்த ஆட்டோவில் சிவக்குமாரை ஏற்றிக்கொண்டு நான் சென்றேன். என் அப்பா இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார். அந்த ஆட்டோவில் நாங்கள் சிலுவத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கும் பார்க்க முடியாது என்றும் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லக் கூறினார்கள். ஆட்டோ ஓட்டி வந்தவர் பயந்துகொண்டு தான் திண்டுக்கல் வர முடியாது என்று கூறியதால் எனது தந்தை வண்டியை ஓட்ட நடுவில் சிவக்குமாரை உட்காரவைத்து நான் பின்னாடி உட்கார்ந்து அவரை

பிடித்துக்கொண்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். மருத்துவர் பரிசோதனை செய்துவிட்டு சிவக்குமார் இறந்து விட்டதாக கூறினார். அதனால் எனது தந்தை மேற்படி சிவக்குமார் வீட்டிற்குச் சென்று அவரது பெற்றோர்களிடம் தகவல் சொல்லிவிட்டு மறுபடியும் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டார். அதன் பின்பு நானும் எனது தகப்பனாரும் வடமதுரை காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கச் சென்றோம். என் தந்தை நடந்த சம்பவத்திற்கு புகார் மனு கொடுத்தார். பின்னர் அங்கிருந்து சம்பவம் நடந்த இடத்திற்கு காவல் துறை எங்களை அழைத்துச் சென்றார்கள். சம்பவ இடத்தை நாங்கள் காட்டிவிட்டு மறுபடியும் காவல் நிலையம் வந்துவிட்டோம். சூழ்நிலை சரியில்லை என போலீசார் என்னையும் என் தந்தையையும் காவல் நிலையத்திலேயே இருக்க வைத்துவிட்டார்கள். காவல் நிலையத்தில் 4 நாட்கள் பாதுகாப்பிற்க்காக இருந்தோம். நான் அப்போது சிவப்பு கலர் சட்டை போட்டு இருந்தேன். என் சட்டை முழுவதும் இரத்தம் படிந்து இருந்தது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தசட்டையை கழட்டி போலீசாரிடம் ஒப்படைத்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் சிவப்பு கலர் இரத்தக்கறை படிந்த சட்டை சம்பவ சமயத்தில் நான் போட்டிருந்ததுதான். அது சாபொ.4. நாங்கள் காவல் நிலையத்தில் இருந்தபோது இவ்வழக்கு சம்மந்தமாக எதிரிகள் அனைவரையும் போலீசார் காவல் நிலையத்திற்கு கூட்டி வந்தார்கள். எதிரிகளையும் விசாரித்தார்கள். இறந்து போன சிவாவை பிரேத பரிசோதனை செய்து அவரது உறவினர்களிடம் பிரேதத்தை ஒப்படைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :–

சிவக்குமார் இறந்த பிறகு என்னையும் என் தகப்பனாரையும் சந்தேகத்தின் பேரில் காவல் நிலையத்தில் நான்கு நாட்கள் உட்கார வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. எங்கள் பாதுகாப்பிற்காகத்தான் உட்கார வைத்திருந்தார்கள். ஆஜர் எதிரிகள் 6 பேரையும் சம்பவ தினத்தன்றும் அதற்கு மறுநாளும் காவல் நிலையத்திற்கு கூட்டி வந்தார்கள்

என்றால் நான் நான்கு நாட்கள் காவல் நிலையத்தில் இருந்தபோது கூட்டி வந்தார்கள். எப்போது என்பது ஞாபகமில்லை. சம்பவ சமயத்தில் நான் ஓம் முருகா செல் கடையில் வேலை பார்த்து வந்தேன் என்றால் சரிதான். அக்கடை பஸ்ஸ்டாண்ட் அருகில் உள்ளதால் ஞாயிற்றுக்கிழமையும் எனக்கு வேலை உண்டு என்றால் சரிதான். எனது வேலை நேரம் காலை 9 மணி முதல் இரவு 8.30 மணிவரையாகும். 9.1.2019 ம் தேதிக்கு முன்னர் ரூ.50000, ரூ.1 லட்சம் கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், என் அப்பா சொல்லித்தான் தெரியும் என்றாலும், சிவப்பு பாசி கொடுத்த விவரமும் என் அப்பா சொல்லித்தான் தெரியும் என்றாலும் சரிதான். என் அப்பா ரூ.50,000, ரூ.1 லட்சம் கொடுத்து ஏமாந்து உள்ள நிலையில் அது குறித்து காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. இதற்கு முன்பு என் அப்பா ஒரு இடத்தில் இருந்து வேறு ஒரு இடத்திற்கு நவரத்தினக்கல்லை மாற்றி விடும் வேலை பார்த்து வந்தார் என்றால் கிடையாது. 09.1.2019 ம் தேதி நான். என் அப்பா இறந்துபோன சிவக்குமாரும் ஆக மூவரும் மாலை 6.30 மணிக்கு கிளம்பி ரூ.1,50,000 த்தை 1வது எதிரியிடம் எங்கு வைத்து கொடுத்தோம் என்றால் எதிரியின் ஊரில் உள்ள ஆலமரத்தின் கீழ் வைத்துக்கொடுத்தோம். எந்த ஊர் என்றால் மணக்காட்டுர். அந்த ஊர் எங்கு உள்ளது என்றால் செங்குறிச்சியில் இருந்து கோபால்பட்டி போகும் வழியில் உள்ளது. மணக்காட்டுர் என்ற ஊரில் கோபால்பட்டி போகும் ரோட்டில் ரோட்டு மேல் உள்ள ஆலமரம் அருகில் வைத்து கொடுத்தோம். 1ம் எதிரியின் ஊர் மணக்காட்டுர் என்பதை எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் அவர் வரச்சொன்னதால் அந்த இடத்திற்குச் சென்றோம். 09.01.2019 ம் தேதி நானும், சிவக்குமாரும், என் தகப்பனாரும் மணக்காட்டுர் சென்று ரூ.1,50,000/- 1ம் எதிரியிடம் கொடுத்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். சிவக்குமார் திண்டுக்கல் அருகே உள்ள என்.எஸ்.நகரில் வசிப்பவர் என்றால் சரிதான். 09.01.2019, 10.01.2019 ஆகிய இரண்டு நாட்களும் சிவக்குமார் என் வீட்டிற்கு வந்தாரா என்றால் நான்

திண்டுக்கல் வந்து சிவக்குகுமாரை கூட்டிச்சென்றேன். என் அப்பா அஞ்சுகுழிப்பட்டியில் இருந்து வந்தார் என்றால் நான் காலையிலேயே திண்டுக்கல் வந்துசிவக்குமாரை கூட்டிக்கொண்டு எங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டு சாப்பிட்டுவிட்டு மாலை நேரத்தில்தான் அங்கிருந்து நாங்கள் மூவரும் கிளம்பி போனோம். வழக்கு சம்பவ இடத்திற்கு சம்பவத்திற்கு முன்னர் நான் போனது இல்லை. எப்படி அந்த இடம் எனக்கு தெரியும் என்றால் நாங்கள் மணக்காட்டுர் மெயின்ரோட்டில் போய்க்கொண்டு இருந்தோம். 1வது எதிரி கருஞ்சாமி எங்களை வந்து கூட்டிப்போனார். கருஞ்சாமி எங்களை கூட்டிச்சென்ற இடத்திலிருந்து சம்பவ இடத்திற்கு சுமார் 10 நிமிடத்தில் சென்றிருப்போம். மணக்காட்டுர் ஊருக்கு சுமார் 1,2 கி.மீ. தொலைவிற்கு முன்பே 1ம் எதிரி வந்து எங்களை கூட்டிப்போனார். மணக்காட்டுரிலிருந்து சம்பவம் நடந்த மாமரத்துப்பட்டி சுமார் 30 கி.மீ. தொலைவில் உள்ளது என்றும் அதை 10 நிமிடத்தில் இருசக்கர வாகனத்தில் செல்ல இயலாது என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் எதிரி இருசக்கர வாகனத்தில் வந்தார். கியர் வைத்த வண்டியில் வந்தார். 1ம் எதிரி எங்கள் மூவரையும் சந்தித்த மணக்காட்டுர் ரோட்டில் இருந்து சம்பவ இடம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 200 மீட்டர் இருக்கும். 9.01.2019ம் தேதி ரூ.1,50,000/– கொடுத்தபோது 1வது எதிரி மட்டும்தான் இருந்தாரா என்றால் அவருடன் சின்னையாவும் இருந்தார். 09.01.2019ம் தேதிதான் முதன் முறையாக 1, 2எதிரிகளை நான் பார்த்தேன் என்றால் சரிதான். வழக்குச் சம்பவம் நடைபெற்றது அனைத்தும் இருட்டுப்பகுதி என்றால் வெளிச்சம் இருந்தது. வெளிச்சம் இருந்த இடத்தில் இருந்து வழக்கு சம்பவம் நடந்த இடம் 50ல் இருந்து 100 மீட்டர் தூரம் இருக்கும். 1,2 எதிரிகளைத் தவிர மற்ற 3 முதல் 6 எதிரிகளை 10.01.2019ம் தேதி இரவு 7 மணிக்குத்தான் முதன் முதலாக பார்த்தேன் என்றால் சரிதான். சிவக்குமார் நவரத்தினக்கல்லை கையில் வாங்கியஉடன் நாங்கள் மூவரும் கிளம்ப இருந்தபோது சிவக்குமார்தான் முதன்முதலில் கத்தியைக் கொண்டு கருஞ்சாமியை குத்தினார் என்றால் அதற்கு முன்னர் வாக்குவாதம் ஏற்பட்டு

2வது எதிரி சிவக்குமாரை 1வது எதிரியிடம் குத்தச்சொல்லியும் அப்போது அவர்கள் அடித்தபோது 1வது எதிரி வைத்திருந்த கத்தி கீழே விழுந்ததை சிவக்குமார் எடுத்து 1வது எதிரியை குத்தினார். சிவக்குமாருக்கு காயம் ஏற்படுவதற்கு முன்பே 1வது எதிரி கருஞ்சாமிக்கு காயம் ஏற்பட்டது என்றால் கத்தியால் ஏற்பட்ட காயம் ஏற்பட்டது. ஆனால் அதற்கு முன்னர் எல்லோரும் சேர்ந்து சிவக்குமாரை அடித்து காயத்தை ஏற்படுத்தினார்கள். நான் சொல்வது போல் ஒரு காயம் மட்டும் 1வது எதிரிக்கு ஏற்படவில்லை என்றும், இடது முன்கை, இடது புஜம், முதுகில் நடுவில் இருந்து இடது கை வரை, இடது தொடை மேல்பகுதி, இடது தாடை ஆகிய 5 இடங்களில் கத்திக்குத்து காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வாறு நிலைகுழைந்து கீழே கிடந்த 1வது எதிரி சிவக்குமாரை நான் சொல்வது போல் குத்துவதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. மற்ற எதிரிகள் சிவக்குமாரை அமுக்கி பிடித்துக்கொள்ள 1வது எதிரி கருஞ்சாமிதான் கத்தியால் சிவக்குமாரின் முதுகில் குத்தினார். உடனே எதிரிகள் 6 பேரும் 6 திசையில் ஓடிவிட்டார்கள். சம்பவ இடம் என்பது சமமான பகுதியாக அல்லது கரந்தன் வீட்டில் இருந்து பள்ளமான பகுதியா என்றால் 3 அடி பள்ளமான பகுதியாகும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து அதிகாரிபட்டி,சிலுவத்தூர் மற்றும் திண்டுக்கல் அரசு மருத்துவமனை ஆகிய இடங்களுக்கு சிவக்குமாரை கூட்டி வரும்போது அவரது இரண்டு கால்களும் இருசக்கரவாகனத்தில் இருந்து ரோட்டில் உரசிக்கொண்டு வந்தது என்றால் ஒரு கால் மட்டும் உரசிக்கொண்டு வந்தது. திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு நாங்கள் வருவதற்கு முன்பே போலீசார் இருந்தனர் என்றால் எப்போதுமே போலீசார் அரசு மருத்துவமனையில் இருப்பார்கள். அங்கிருந்த போலீசாரிடம் நான் நடந்த விவரத்தைச் சொன்னேன். இரவு 11 மணிக்கு வடமதுரை காவல் நிலையம் சென்றோம். அப்போதே போலீசார் புகாரை பெற்றுக்கொண்டார்கள். என் அப்பா நாகரத்தினக்கல்லை வாங்கித்தருவதாக பல பேரை ஏமாற்றி இருக்கிறார் என்றால் சரியல்ல. என் அப்பா முதன் முறையாக அப்போதுதான் அந்த கல்லை பார்த்தார். என் அப்பா

மலையூரைச் சேர்ந்த சின்னராஜ் என்பவருடன் சேர்ந்து லைட் வைத்து நாகரத்தினக்கல் என பலபேரை ஏமாற்றி உள்ளார் என்றால் சரியல்ல. அதே போல் சிவக்குமாரையும் என் அப்பா அதிக மதிப்புள்ள நாகரத்தினக்கல் உள்ளது என கூட்டிப்போனார் என்றால் சரியல்ல. சிவக்குமார் நண்பர் என்பதால் என்னுடன் வந்தார். அங்கு வைத்து பலகோடி பெறுமானமுள்ள நாகரத்தினக்கல்லை தருவதாகச் சொல்லி அங்கிருந்தவர்களை நம்ப வைத்தும், அப்போது அங்கிருந்தவர்களால் ஏற்பட்ட தள்ளுமுள்ளில்தான் சிவக்குமாருக்கும் 1ம் எதிரிக்கும் காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதன் பிறகுதான் எனக்கு தகவல் சொல்லி நான் காயம்பட்ட சிவக்குமாரை வேறு ஒரு இடத்திலிருந்து அழைத்துச்சென்றேன் என்றால் சரியல்ல. நான் குத்தியதை நேரில் பார்த்தேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், நான் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி இல்லை என்றால் சரியல்ல. போலீசார் சொல்லிக்கொடுத்து என் தகப்பனாரை காப்பாற்ற வேண்டிய பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாபொ1 கத்தியால் 1வது எதிரியால் இறந்த சிவக்குமாருக்கு எந்தவித காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சாபொ.4 என்னுடைய சட்டை இல்லை என்றும் 1ம் எதிரியின் சட்டை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்குக்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும், சம்பவ இடத்தில் எதிரிகள் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.11.19 17:55:50 +0530

Principal District Judge,
Dindigul.